கவனிக்க.– 07.08.2025 ஆந் திகதிய 2449 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (ஆ) (தமிழ் மொழிமூலம்) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2450 - 2025 අගෝස්තු මස 15 වැනි සිකුරාදා - 2025.08.15

2450 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 370 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 374 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**
**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2025, செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, ஓகத்து மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோறாள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


369 - B 82710 - 403 (2025/08)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104) ஆம் பிரிவு தொடர்பான அறிவித்தல்**

தென் மாகாணத்தின் மாத்தறை நிர்வாக மாவட்டத்தில் அமைந்துள்ள தில்வெல்ல பிரதேச செயளாளர்பிரிவின் பிரதேச செயலாளர் மதுமதி எம். ரத்நாயக ஆகிய நான், காணி அபிவிருத்திக்கட்டளை சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1982.02.26 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ள இலக்கம் மாற/பிர/1858 ஆம் அளிப்புப்பத்திரத்தின் கீழ் உரிமையாளரரான தொடம்பகல கிழக்கு எனும் முகவரியில் வசிக்கும் தொடம்பகல ஆரச்கே எலடிஸ் ஸில்வா என்பவருக்கு கையளிக்கப்பட்டு மாத்தறைமாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் LDO 1132 ஆம் இலக்கத்தின் கீழ் 1982/04/30 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில்குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாவதற்குச் சட்டரீதியான உரிமையாளர் இல்லாத காணரத்தால் குறித்த அன்பளிப்பு பத்திரத்தை மேற் கூறிய சட்டத்தன் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்துநீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2025.09.05 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெறிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

தென் மாகாணத்தின் மாத்தறை நிர்வாக மாவட்டத்தின் திக்வெல்ல பிரதேச செயளாளர் பிரிவின் வெல்லபட பத்துவ தொடம்பகல கிழக்கு கிராம அலுவலர் பிரிவின் தொடம்பகல கிழக்கு எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும்தில அளவை அதிபர் என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டவெளிக்கள புத்தகத்தின் இலக்கம் பீ 21/31 முற் பிரதிப்பட இலக்கம் தர இல் காணித்துண்டு இலக்கம் 101 விஸ்தீரணம் 22 இலக்கம் கொண்ட ஒரு துண்டாக காட்டப்பட்டுள்ள சுமார் 1 றுட் பிரமாணத்தில் 06 பேர்ச் கொண்ட கீழே தரப்பட்டுள்ள எல்லைகளையும் பெயரையும் முடைய அரச காணித்துண்டு.

வடக்கு : ஆரம்பப்பட இலக்கம் 101 இல் 17 துண்டு;
கிழக்கு : ஆரம்பப்பட இலக்கம் 101 (பிரதேச வீதி) துண்டு இலக்கம் 38;
தெற்கு : ஆரம்பப்பட இலக்கம் 101 இல் 23 துண்டு;
மேற்கு : ஆரம்பப்பட இலக்கம் 101 (பிரதேச வீதி) துண்டு இலக்கம் 33.

மதுமதி எம். ரந்நாயக்க,
பிரதேச செயலாளர்,
திக்வெல்ல.

2025, ஏப்பிறல் 07.

08 - 148

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டமூலத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட வழங்கல் அளிப்புப் பத்திரத்தை பதிவழ்த்து நீக்குதல் செய்தல் (104 ஆவது பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

தென் மாகாணத்தின், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் வீரகெட்டிய பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் இந்திக ருவன் குமார விதாரண ஆகிய நான், காணி அபிவிருத்திச் சட்டத்தின் 19 (4) உப பிரிவின் கீழ், அதிமேதகு சனாதிபதி மூலம் 1997.09.03 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள இலக்கம் ஹம்/6/வ/46717 உடைய வழங்கல் பத்திரத்தின் உரிமையாளர் ஆகிய வீரகெட்டிய ஹதமுன யாய கிரம வாடியவில், வசிக்கும் ரணமுககே பொடிஹாமி என்பவருக்கு வழங்கப்பட்டு தங்காலை மாவட்டப்பதிவுக் காரியாலய இலக்கம் 98 இன் கீழ் 2001.01.24 ஆந்திகதி பதிவு செய்யப்பட்டுள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்படும் காணிக்கு பிரதியீட்டாளராக ஆவதற்கு சட்டபூர்டவமான ஒருவர் இல்லாமையின் காரணமாக அல்லது உரிமை உள்ள ஒருவர் இருப்பினும் அவர் பிரதியீட்டாளராக விருப்பமின்மையினால் பிரதியீட்டாளர் தன்மைக்கு ஒருவரை நியமனம் செய்யவதற்கு இல்லை என அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளதால் அந்த வழங்கல் பத்திரத்தை உரிய சட்டத்தின் 104

ஆவது பந்தியின் படி இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துச் செல்கின்றோம் என்பதை இத்தால் அறிவிக்கின்றேன். இது தொடர்பாக ஏதேனும் எதிப்புக்கள் இருப்பின் அதனை 2025.09.05 ஆந் திகதிக்கு முன் எனக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

**அட்டவணை**

ஹம்பாந்தோட்டை நிர்வாக மாவட்டத்தின் வீரகெட்டிய பிரதேச செயலாளர் பிரிவின், வடக்கு கிருவா பத்துவின் புத்தியாகம மேற்கு கிராம அலுவலர் பிரிவின், இ. கி. வ 242 - ஹதமுன என்னும் கிராமத்தில் அமைந்துள்ளதுமான அளவையாளர் நாயகம் மூலம் தயாரிக்கப்பட்ட இலக்கம் ...... உடைய ரேகை அறிக்கையின் இலக்கம் ............. உடைய காணித் துண்டாகக் காட்டப்பட்டுள்ளதுமான, அளவில் 01 ஏக்கர், 00 றூட், 00 பர்சஸ் விசாலமுடையதுமான, பின்வரும் வகையில் எல்லையிடப்பட்ட அரசாங்கக் காணி : கட்டுஆரஹேன

வடக்கு : பாதை ஒதுக்கப்பட்டது;
கிழக்கு : பாதை ஒதுக்கப்பட்டது;
தெற்கு : பாதை ஒதுக்கப்பட்டது;
மேற்கு : எல். எல். 21647 ஆர். எம். பொடிஹாமியின் கூலி நிலம்.

ஜ. ஆர். கே. விதாரண,
பிரதேச செயலாளர்,
வீரகெட்டிய.

2025, மே 09.

08 - 149/1

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டமூலத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப் பத்திரத்தை பதிவழத்து நீக்குதல் செய்தல் (104 ஆவது பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

தென் மாகாணத்தின், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் வீரகெட்டிய பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் இந்திக ருவன் குமார விதாரண ஆகிய நான், காணி அபிவிருத்திச் சட்டத்தின் 19 (4) உப பிரிவின் கீழ், அதிமேதகு சனாதிபதி மூல ம் 1997.08.27 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள இலக்கம் ஹம்/6/வ/36633 உடைய வழங்கல் பத்திரத்தின் உரிமையாளர் ஆகி ய வீரகெட்டிய ஹதமுன, கடுஆரெஹேனவில் வசிக்கும் ரணமுககே பொடிஹாமி என்பவருக்கு வழங்கப்பட்டு தங்காலை மாவட்டப் பதிவுக் காரியாலய இலக்கம் 2262 இன் கீழ் 1997.06.11 ஆந்திகதி பதிவு செய்யப்பட்டுள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்படும் காணிக்கு பிரதியீட்டாளராக ஆவதற்கு சட்டபூர்வமான ஒருவர் இல்லாமையின் காரணமாக அல்லது உரிமை உள்ள ஒருவர் இருப்பினும் அவர் பிரதியீட்டாளராக விருப்பமின்மையினால் பிரதியீட்டாளர் தன்மைக்கு ஒருவரை நியமனம் செய்யவதற்கு இல்லை என அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளதால் அந்த வழங்கல் பத்திரத்தை உரிய சட்டத்தின் 104 ஆவது பந்தியின் படி இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துச் செல்கின்றோம் என்பதை இத்தால் அறிவிக்கின்றேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2025.09.05 ஆந் திகதிக்கு முன் எனக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

**அட்டவணை**

ஹம்பாந்தோட்டை நிர்வாக மாவட்டத்தின் வீரகெட்டிய பிரதேச செயலாளர் பிரிவின், வடக்கு சிருவா பத்துவின் புத்தியாகம மேற்கு கிராம அலுவலர் பிரிவின், இ. கி. வ 242 - ஹதமுன என்னும் கிராமத்தில் அமைந்துள்ளதுமான அளவையாளர் நாயகம் மூலம் தயாரிக்கப்பட்ட இலக்கம் ...... உடைய ரேகை அறிக்கையின் இலக்கம் ............. உடைய காணித் துண்டாகக் காட்டப்பட்டுள்ளதுமான, அளவில் 01 ஏக்கர், 00 றூட், 00 பர்சஸ் விசாலமுடையதுமான, பின்வரும் வகையில் எல்லையிடப்பட்ட அரசாங்கக் காணி : கொடெல்லஹேன

வடக்கு : பாதை ஒதுக்கப்பட்டது;
கிழக்கு : பாதை ஒதுக்கப்பட்டது;

தெற்கு : பாதை ஒதுக்கப்பட்டது;
மேற்கு : எல். எல். 8456 ஆர். எம். பொடிஹாமியின் கூலி நிலம்.

ஐ. ஆர். கே. விதாரண,
பிரதேச செயலாளர்,
வீரகெட்டிய.

2025, மே 09.

08 - 149/2

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 பிரிவு) தொடர்னா அறிவித்தல்**

தென் மாகாண சபையில் ஹம்பாந்தோட்டை மாவட்ட லுணுகம்வெகர பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் இசங்க லக்மால் விக்ரமநாயக்க என்னும் நான், காணி அபிவிருத்தி சட்டத்தின் 19 (4) உட்பிரிவின் கீழ் அதிமேகு சனாதிபதியால் 1997.11.10 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள இலக்கம் ஹம்/11/பிரா 41519 கொண்ட மானிய பத்திரத்தின் உரிமையாளரான இலக்கம் 530, குடா கம்மான 04, வலக்கரை, லுணுகம்வெகரயில் வசிக்கும் ஜினதாஸ விக்கிரம ஆரச்சிக்கு வழங்கி ஹம்பாந்தோட்டை மாவட்ட பதிளாளர் காரியாலயத்தில் இலக்கம் ஹம்/95/4042/99 இன் கீழ் 1999.10.01 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழ் அட்வணையில் காணப்படும் காணிக்கு பிரிதொருவராக சட்டப்படியாக உரிமையாளர் ஒருவர் இல்லாத படியால் அல்லது உரிமையாளர் ஒருவர் இருப்பினும் அவர் பிரதி ஒருவராக மாற விருப்பமின்மையாலும் பிரதி ஒருவராக ஒருவரை நியமிக்கவில்லை என அறிய கிடைக்கப்பெற்றுள்ளதுடன் அதன் சலுகை பத்திரம் அந்தச் சட்டத்தின் 104 ஆவது உட்பிரிவின் கீழ் இரத்து செய்ய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை இதன் மூலம் அறியத் தருகிறேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2025.09.05 ஆந் திகதிக்கு முன் என்னிடம் எழுத்து மூலம் அறிய தர வேண்டும்.

**அட்டவணை**

ஹம்பாந்தோட்டை நிர்வாக மாவட்டம் லுணுகம்வெகர பிரதேச செயலாளர் பிரிவில் மாகம் பத்துவே கோரளே கெண்தகஸ்மங்கட கிராம அலுவலர் பிரிவில் வலக்கரை குடா கம்மான 04 எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் லுணுகம்வெகர பிரதேச செயலாளர்/ பொறுப்பில் உள்ள மற்றும் எண் ............. கொண்ட புலத்தால்/ .................... மூலம் தொகுக்கப்பட்ட எண் .................... கொண்ட துண்டு பிரிக்கப்பட்ட தொகுதியில்/ ............. மூலம் தொகுக்கப்பட்ட எண் ............. கொண்ட ரேகை குறிப்பில் இலக்கம் 484 வயல் கொண்ட நிலத்து துண்டாக காட்டப்பட்டுள்ள அளவில் 01 ஹெக்டயர் பெரிதாக கொண்டதும் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைக்குட்பட்ட அரசாங்க காணியாகும்.

வடக்கு : இலக்கம் 32 கெத்எல, இலக்கம் 483, எம். டப்லியூ. ஆரியவத்தீயின் காணி;
கிழக்கு : ப (B) ஸ்னா எல, இலக்கம் 483, எம். டப்லியூ. ஆரியவத்தீயின் காணி;
தெற்கு : இலக்கம் 485, ஏ. டீ. பியதாஸவின் காணி;
மேற்கு : கெத் எல இருப்பு.

ஐ. எல். வித்திரமநாயக்க,
பிரதேச செயலாளர்,
லுணுகம்வெகர்.

2024, நவெம்பர் 21.

08 - 150/1

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது உறுப்புரையின் (4) ஆம் உப பிரிவின் அட்டவணையின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப் பத்திரத்தினை இரத்துச் செய்தல் - (104 ஆம் பந்தி) இற்கான அறிவித்தல்**

தென் மாகாண சபையில் அம்பாந்தோட்டை மாவட்டம் வீரகெட்டிய பிரதேச செயலகப் பிரிவின், பிரதேச செயலாளர்/ பிரதி காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடையே) இந்திக்க ருவன் குமார விதாரன ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 (4) உப பிரிவின்படி அதி மேன்மை தங்கிய சனாதிபதி அவர்களால் 1987 மார்ச் 23 ஆந் திகதி அளிக்கப்பட்ட இல. அம்/பி/5850 இனைக் கொண்ட அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான பிராக்மனயாகம வில் வதியும் லியனஆரச்சிகே அந்திராயஸ் அவர்களுக்கு வழங்கப்பட்டு தங்காலை மாவட்ட பதிவு அலுவலகத்தில் இல. 785 இன் கீழ் 1988.04.06 ஆந் திகதியன்று பதிவுசெய்யப்பட்ட கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் காண்பிக்கப்பட்டிருக்கும் காணிக்கு வாரிசாக சட்டப்படி உரிமையுள்ள ஒருவர் இன்மை மற்றும் உரிமையுள்ளவர் இருப்பினும் அவர் வாரிசாவதற்கு விருப்பமின்மை காரணமாக வாரிசாக ஒருவரை நியமிப்பதற்கு இல்லை என்பதாக அறிக்கையிடப்பட்டதானல் அவ்வளிப்புப் பத்திரமானது மேற்குறிப்பிட்ட சட்டத்தின் 104 ஆம் உறுப்புரையின் கீழ் செல்லுபடியற்றதாக்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதென்பதை இத்தால் அறிவிக்கிறேன். இது தொடர்பாக முறைப்பாடுகள் இருப்பின் அதனை 2025.09.05 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் எனக்கு அறிவித்தல் வேண்டும்.

**அட்டவணை**

அப்பாந்தோட்டை நிர்வாக மாவட்டத்தின் வீரகெட்டிய பிரதேச செயலகப் பிரிவின் வடக்கு கிருவாபத்துவ கிஞ்சிகுனே தெற்கு கிராம அலுவலர் பிரிவின் பிராக்மனயாகம என்னும் ஊரில் அமைந்துள்ள - மற்றும் காணி அளவீடு நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இல. - கொண்ட துறைசார் பத்திரத்தின் - அவர்களால் தயாரிக்கப்பட்ட இல. அ. பி. பி. 377 இனைக் கொண்ட துண்டாடப்பட்ட உரிமத்தின்/ - அவர்களால் தயார் செய்யப்பட்ட இல. - கொண்ட வரைபடக் குறிப்பின் இல. 54 இனைக் கொண்ட காணித்துண்டாக காண்பிக்கப்பட்டுள்ளதும், அளவில் 0.970 ஹெக்டயார் - விஸ்தீரணத்தைக் கொண்டதுமான கீழே குறிப்பிடப்படும் எல்லைகளைக் கொண்ட அரச காணியானது:

வடக்கு : கூறு 18 பிரவேச வழி;
கிழக்கு : கூறு 51 இன் காணித் துண்டும், கூறு 52 1/2 பிரவேச வழி;
தெற்கு : காட்டு வழி;
மேற்கு : கூறு 55 இன் காணித்துண்டு என்பனவாகும்.

ஐ. ஆர். கே. விதாரண,
பிரதேச செயலாளர்/பிரதி காணி
ஆணையாளர் (மாகாணங்களுக்கிடையே),
வீரகெட்டிய.

2025, மாச்சு 21.

08 - 150/2

---

**திருத்தம்**

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப் பத்திரத்தை இரத்துச் செய்தல் - (பிரிவு 104) இற்கான அறிவித்தல்**

எனது தொடர்பு இலக்கம்: ඉලි/10/1/126.

காணி அபிவிருத்திக கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1597 ஆம் இலக்க மற்றும் 08.04.2009 திகதியிட்ட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பிரிவு 104 இன் கீழ் உள்ள அறிவிப்பில் ஆர் அளிப்பு பத்திரகாரரின் பெயரானது வைத்தியலிங்கம் விஜேசேகரம் எனவும் ஆட்சேபனைகளைச் சமர்ப்பிப்பதற்கு வழங்கப்பட்ட திகதியானது 22.09.2025 எனவும் திருத்தப்படல் வேண்டும் என இத்தால் அறிவிக்கிறேன்.

எஸ். எம். பீ. நந்தசேன,
பிரதேச செயலாளர்,
வண்ணாத்திவில்லு.

வண்ணாத்திவில்லு பிரதேச செயலகம்.
2025.07.21,

08 -107

# நானாவித காணி அறிவித்தல்கள்

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/53351.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: පළාත්/ඉකො/ ඉ9/කුලි.බ0/දී.බ.03

.

### 21(2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்

குருநாகல் மாவட்டத்தின் குளியாப்பிட்டிய மேற்கு பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம் 1125 உனலீய கிராம அலுவலர் பிரிவின் உனலீய கிராமத்தின் மெனிக்தென்னஹேன காணியில் அமைந்துள்ள இ. கி. ப. 2455 நில அளவை வரைபடத்தின் துண்டு இலக்கம் 363 மூலம் காண்பிக்கப்பட்டுள்ள 0.212 ஹெக்டேயர் பரப்பளவு கொண்ட அரசாங்க காணித் துண்டை மதம் சார்ந்த நடவடிக்கைக்காக உனலீய மல்கல ஆசிரமத்தின் நம்பிக்கை பொறுப்பாளர் சபையினால் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

வடக்கு: இ. கி. ப. 2455 பத்திரம் 12 அனுபந்தம் 11 இன் துண்டு இலக்கம் 362;
கிழக்கு: இ. கி. ப. 2455 பத்திரம் 12 அனுபந்தம் 11 இன் துண்டு இலக்கம் 365 மற்றும் 259;
தெற்கு: இ. கி. ப. 2455 பத்திரம் 12 அனுபந்தம் 11 இன் துண்டு இலக்கம் 174;
மேற்கு: இ. கி. ப. 2455 பத்திரம் 12 அனுபந்தம் 11 இன் துண்டு இலக்கம் 174;.

03. கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே, அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய காணியை நிபந்தனைகளின் கீழ் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் கருதியுள்ளது.

(அ) குத்தகைக் காலம் : முப்பது (30) வருடங்கள் (2025.05.23 ஆம் திகதி முதல் 2055.05.22 ஆம் திகதி வரை)

(ஆ) வருடாந்த குத்தகைத் தொகை :- தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில், 2025 ஆம் ஆண்டில் காணியின் மேம்படுத்தப்படாத பெறுமதியின் 1/2% ஆகும்.

தவணைத் தொகை :- தவணைத் தொகை அறவிடப்பட மாட்டாது;

(இ) இந்தக் காணியை மல்கல ஆசிரமத்தினை நடாத்துவனைத் தவிர வேறு நடவடிக்கைக்கும் பயன்படுத்திக்கொள்ளக் கூடாது;

(ஈ)i. குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள் குத்தகை ஆரம்பிக்கும் திகதி முதல் பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் அந்தக் காணியில் ஆசிரமத்தை நடாத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல் வேண்டும்;

ii. குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள் இந்தக் காணியில் காணப்படுகின்ற மரம், செடி கொடிகளை பூரணமாகப் பாதுகாத்தல் வேண்டும். அரசாங்க அதிபரின் எழுத்து மூலமான அனுமதியின்றி இந்த மரம், செடி கொடிகளை வெட்டுதல், அழித்தல் அல்லது எந்தவிதமான பாதிப்புக்களையும் ஏற்படுத்தல் கூடாது;

(உ) குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள் இந்தக் காணியை மேலே (இ) இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயத்திற்காகவன்றி வேறு நடவடிக்கைக்கு பயன்படுத்திக்கொள்ளக் கூடாது;

(ஊ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை உட்படுதல் வேண்டும்;

(எ) அமைக்கப்பட்டுள்ள/ நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடங்களை சிறப்பான அபிவிருத்தி நிலைமையுடன் பேணிவரல் வேண்டும்;

(ஏ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைதாரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப் பகுதியினுள் நிறைவேற்றுக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(ஐ) 2025.05.23 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் கழியும் வரை இந்தக் காணியை குத்தகைக்குப் பெற்றுக்கொண்ட விடயத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கான உப குத்தகை அல்லது உரிமை மாற்றம் தவிர ஏனைய உப குத்தகை அல்லது உரிமை மாற்றத்திற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஒ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு, குத்தகையைச் செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும். குத்தகையைச் செலுத்துவதனை தொடர்ச்சியாக மேற்கொண்டிராத சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டும் நிலுவை குத்தகைத் தொகைக்கு 10% தண்ட வரி அறவிடப்படும்.

வர்த்தமானியில் அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

ஆர். டீ. எல். சமிந்து லக்ஷான் ஜயரத்ன,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
காணிச் செயலகம்,
"மிஹிகத்த மெதுர",
இலக்கம் 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2025, யூலை 31.

08 - 160

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/68034.
காணி ஆணையாளரின் இலக்கம்: SPLC/GAL/5/10/3/198.

**21(2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்**

காலி மாவட்டத்தின் நியாகம பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம் 33B, பொரலுஹேன கிராம அலுவலர் பிரிவில் ஹத்தக்க கிராமத்தில் தோராயமான சுவட்டு வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள 10 பேர்ச பரப்பளவு கொண்ட அரசாங்க காணித் துண்டை சங்க நடவடிக்கைக்காக பிவிதுரு நலன்புரி சங்கத்தின் நம்பிக்கை பொறுப்பு சபையினால் நீண்ட காலக் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

வடக்கு: ஸ்வசக்தி மித்துரோ மன்றம் சங்கத்திற்கு ஒதுக்கப்பட்ட காணி (222 C இன் ஒரு பகுதி);
கிழக்கு: ஹத்தக்க உனன்ஓவிட்ட சணச சங்கத்திற்கு ஒதுக்கப்பட்ட காணி;
தெற்கு: கிளை வீதி;
மேற்கு: கிளை வீதி.

கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் காணியை குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் கருதியுள்ளது.

(அ) குத்தகைக் காலம் : ஐந்து (05) வருடங்கள் (2022.06.30 ஆம் திகதி முதல் 2027.06.29 வரை)
வருடாந்தக் குத்தகைத் தொகை :- தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில், 2022 ஆம் ஆண்டில் காணியின் மேம்படுத்தப்படாத பெறுமதியின் 1/2% ஆகும்.

(ஆ) இந்தக் காணியை பிவிதுரு நலன்புரி சங்கத்தின் சன சமூக மண்டபத்தை நிர்மாணித்தல் தவிர வேறு நடவடிக்கைக்காகப் பயன்படுத்திக்கொள்ளக் கூடாது;

(இ) இந்தக் குத்தகை ஆரம்பித்து ஒரு (01) வருட காலத்திற்குள் பிரதேச செயலாளர் திருப்திடையும் வகையில் இந்தக் காணியை அபிவிருத்தி செய்தல் வேண்டும்;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை உட்படுதல் வேண்டும்;

(உ) அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்களை சிறப்பான அபிவிருத்தி நிலைமையுடன் பேணிவரல் வேண்டும்;

(ஊ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைதாரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப் பகுதியினுள் நிறைவேற்றுக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(எ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு, குத்தகையைச் செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும்.

இந்த அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

துசித்த கலப்பத்தி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
காணிச் செயலகம்,
"மிஹிகத்த மெதுர",
இலக்கம் 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2025, ஓகத்து 02.

08 - 209